Sri A. GOVINDASAMY : தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் இருக்கிற பகுதிகளில் ஜப்பானிய முறையை வலியுறுத்துகிற மாதிரி, அந்தத் திட்டங்கள் இல்லாத பகுதியிலும் அந்த முறையைக் கையாளவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறுதான் கவனம் செலுத்திவருகிறோம். திட்டம் இல்லாத இடங்களில் ஜப்பானிய முறையைக் கையாள அரசாங்கம் ஆதரவு அளிக்கும்.

Prohibition of certain dailies in reading rooms

* 173 *Q.*—**Sri P. U. SHANMUGAM :** Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have directed the local bodies not to subscribe to certain dailies and weeklies for being placed in the reading rooms run by them;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the names of those weeklies and dailies?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir

(*b*) & (*c*) Do not arise.

Sri A. V. P. ASAITHAMBI : அரசாங்கத்திற்கு சம்பந்தப்பட்ட நகரசபை வாசகசாலைகளிலே திராவிட நாடு போன்ற திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளை அனுமதிக்கக் கூடாதென்று சர்க்கார் அறிவித்திருப்பதாகவும், அதன் பேரில் ஆலந்தூர் பஞ்சாயத்து எக்ஸிகூடிவ் ஆபீஸர் அந்தமாதிரிப் பத்திரிகைகளை வாங்கக் கூடாதென்று எழுத்து மூலம் சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எந்தத் தனிப்பட்ட பத்திரிகையையும் வாங்கக் கூடாதென்று சர்க்கார் எந்தவிதமான உத்திரவும் போட்டது கிடையாது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் வாங்கலாம். அந்த நிபந்தனைகள் யாவனவென்றால் :

(i) The books, magazines and journals to be purchased should be of general public interest and of cultural value;

(ii) The books, classified as short stories or novels, shall be those by standard authors and shall not be of doubtful taste;

(iii) Books, magazines and journals abusing communities or religions shall not be purchased;

(iv) Books, magazines and journals which are of doubtful taste or which contain indecent or undesirable pictures shall not be purchased; and

(v) Prescribed and obscene publications shall not be purchased.

Sri K. VINAYAKAM : Sir, are the Government aware that the journals enumerated by the hon. Member, Sri Asaithambi, do belong to a party and they only cater to the party needs and also they do not come under the categories described by the Hon. Minister for Finance?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am not here to give judgment. As a matter of fact, panchayats and other organizations concerned are given full liberty to take decisions but if it is

3rd March 1958]

ultimately found that they come under any of the objectionable items, then they may be surcharged or other action might be taken.

Sri S. LAZAR : ஒரு சில நகரசபைகளிலே அல்லது சில பொது ஸ்தாபனங்களிலே அந்தமாதிரிப் பத்திரிகைகளை ஒதுக்குவதற்குக் காரணம் அந்தப் பத்திரிகை "நியூஸ் பேப்பர் ஆக இருப்பதற்குப் பதிலாக "வியூஸ் பேப்பர்" ஆக இருக்கிறது என்று சொல்லுவது உண்மைதானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : யாரும் எந்தப் பத்திரிகையையும் வாங்கவேண்டுமென்று வாங்க முடியாது. அவரவர்கள் இஷ்டப்பட்டால் தான் வாங்கலாம்.

Sri A. GOVINDASAMY : பத்திரிகைகள் தவறான செய்திகளைப் பிரசுரிக்கின்றனவா, இல்லையா என்பதை முடிவு செய்கின்ற பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு விடுவதால் கட்சிப் பிரதிக கட்சி மனப்பான்மை ஏற்படுகிறது. தவறான பத்திரிகைகளைத் தடை செய்யும் பொறுப்பு அரசாங்கத்திற்கே இருக்கவேண்டும். ஆகவே அவர்களுக்கு அதை விடுவது சரியா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே இரண்டு விஷயம் இருக்கிறது. தவறான பத்திரிகைகளை வாங்கக் கூடாது. வாங்குவதற்கும், வாங்காததற்கும் அந்த சபைக்கும், ஸ்தாபனத்திற்கும் வாய்ப்பு இருக்கிறது.

Villages affected by the Pullambadi Scheme

* 174 Q.—**Sri S. LAZAR** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of

(i) residential houses and

(ii) whole villages affected by the Pullambadi Channel Scheme;

(*b*) whether alternative sites are being allotted to the house owners concerned; and

(*c*) whether the Government propose to construct colonies for the Harijan house owners among them?

The Hon. Sri P. KAKKAN : (*a*) (i) At present the number of residential buildings affected is 24 huts and one tiled building. This is only tentative.

(ii) No whole village is affected.

(*b*) & (*c*) The question of allotment of alternative sites, etc. will be considered in due course, if found necessary. It does not arise at present.

Sri S. LAZAR : இந்தத் திட்டம் பூர்த்தியாகுமானால் ஒரு சில கிராமங்கள் பாதிக்கப்படுமென்று தெரியவருகிறது. அப்படிப் பாதிக்கப்படும் போது, புதிதாக காலனி அமைத்துக் கொடுக்கும்பொழுது அவர்களுக்கு முதலிடம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.